# தி. மு. க. மகளிர் தொண்டர் அணி

## ஒன்றிய, நகர, பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

## கோவை தெற்கு மாவட்டம்

### மதுக்கரை மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - எஸ். பொன்மணி வாணி 1/72, விநாயகர் கோவில் வீதி, பாலத்துறை, கோவை - 641105.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். அன்னபூரணி 1/58ஏ, குமாரபாளையம், கோவை - 641105. 2) ம. ரஞ்சிதா ரங்கசமுத்திரம், கோவை - 641105. 3) பி. மகேஸ்வரி எம்.ஜி.ஆர். நகர். நவக்கரை, கோவை – 641105. 4) ப. சுசிலா நேதாஜிபுரம் , க.க. சாவடி, கோவை - 641105. 5) பி. காளீஸ்வரி ஆதிதிராவிடர் தெரு, வீரபனூர், கோவை - 641105.

### மதுக்கரை கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - நி. பியூலா ஹெப்சி 1/857/ஏ, டாக்டர் அம்பேத்கர் நகர், செட்டிபாளையம் ரோடு, மலுமிச்சம்பட்டி, கோவை - 641201.

துணை அமைப்பாளர்கள் – 1) கே. ரேவதி 3/84, கருப்பராயன் கோவில் வீதி, போடிபாளையம், கோவை - 641105. 2) கே. அருணா தேவி அன்பு நகர், ஹவுசிங் யூனிட், மலுமிச்சம்பட்டி, கோவை - 641050. 3) அ. அம்பிகா 31/ ஸ்ரீ கிருஷ்ணா கார்டன், நேரு, கல்லூரி ரோடு, மலுமிச்சம்பட்டி, கோவை - 641050. 4) புஷ்பா மலுமிச்சம்பட்டி, கோவை. 5) எஸ். சல்மா 3வது, பிளாக், 69, வெள்ளலூர் அடுக்குமாடி குடியிருப்பு, கோவை.

### சூலூர் மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - இந்திரா சின்னியம்பாளையம், சூலூர், கோவை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கௌரி நீலம்பூர், சூலூர், கோவை மாவட்டம். 2) விஜயா மயிலம்பட்டி, சூலூர், கோவை மாவட்டம். 3) தேன்மொழி, நீலம்பூர், சூலூர், கோவை மாவட்டம். 4) ஷாலினி அரசூர், சூலூர், கோவை மாவட்டம். 5) கற்பகம் முத்துக்கவுண்டன்புதூர், கோவை மாவட்டம்.

### சூலூர் வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - இரா. அன்னபூரணி 2/116, வடுகபாளையம், கிட்டாம்பாளையம், கோவை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ப. ராஜாமணி 6/391, உஞ்சப்பாளையம், கணியூர், கோவை மாவட்டம். 2) சு. கலைமணி 2/157, குட்டையகாடு, சங்கோதிபாளையம், கணியூர், கோவை மாவட்டம். 3) வி. சாந்தி 2/86, இராசிபாளையம், சூலூர், கோவை மாவட்டம். 4) வி. கவிதா கிட்டாம்பாளையம், சூலூர், கருமத்தம்பட்டி, கோவை மாவட்டம்.

### கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - பி. தமிழ்செல்வி காந்தி நகர், வடபுதூர், கிணத்துக்கடவு, கோவை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. ஜானகி 1/100, முனியப்பன் கோவில் வீதி, வடபுதூர், கிணத்துக்கடவு, கோவை மாவட்டம். 2) அ. ரம்யா சிங்கையன்புதூர், சொக்கனூர் அஞ்சல், கிணத்தக்கடவு, கோவை மாவட்டம். 3) பி. சண்முகப்பிரியா 1/97/1, மதுரை வீரன் கோவில் வீதி, சொலவம்பாளையம், கிணத்துக்கடவு, கோவை மாவட்டம். 4) சங்கீதா மதுரைவீரன் கோவில் வீதி, முத்துக்கவுண்டன் புதூர், கோவை மாவட்டம். 5) ஆர். முத்துலட்சுமி 7/69, ரங்கே கவுண்டன்புதூர், பாலார்பதி அஞ்சல், கிணத்துக்கடவு, கோவை - 642109.

### கிணத்துக்கடவு தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ரா. சத்யா 6/92, செட்டியக்கா பாளையம், நெகமம் வழி, கிணத்துக்கடவு, வட்டம், கோவை - 642120.

துணை அமைப்பாளர்கள் - 1) சு. பூங்கொடி 3/9, வலசுபாளையம், நெகமம், வழி, கிணத்துக்கடவு, கோவை - 642120. 2) எம். திவ்யா வடக்கு தெரு, சிறுக்களந்தை, கிணத்துக்கடவு வட்டம், கோவை மாவட்டம் - 642202. 3) கா. கிரேஸி 1/12, தேவனாம்பாளையம், நெகமம் வழி, கிணத்துக்கடவு, கோவை - 642120. 4) பி. பாரதி தேவனாம்பாளையம், கிணத்துக்கடவு, கோவை மாவட்டம்.

### கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - செ. உமாமகேஸ்வரி கோதவாடி, கிணத்துக்கடவு வழி, கோதவாடி, கோவை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சி. பூங்கொடி குருநல்லிபாளையம், கிணத்துக்கடவு, கோவை மாவட்டம். 2) ஆர். சுமித்ரா 3/90, கன்னிமார் கோவில் தெரு, காட்டம்பட்டி புதூர், கிணத்துக்கடவு, கோவை - 642202. 3) பி. சங்கீதா 2/106, மதுரை வீரன் கோவில் தெரு, காட்டம்பட்டி, கிணத்துக்கடவு தாலுக்கா, கோவை மாவட்டம். 4) கே. சுசீலா பழனி ஆண்டவர் கோவில் வீதி, காட்டம்பட்டி, கிணத்துக்கடவு தாலுக்கா, கோவை மாவட்டம்.

### கிணத்துக்கடவு மத்திய ஒன்றியம்

அமைப்பாளர் - எஸ். ரம்யா மேட்டுப்பாளையம், கோவை.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். மரகதம் தெற்கு வீதி, கொண்டம்பட்டி, கோவை. 2) பா. ஷகிலா 1/172, அண்ணா நகர், கொண்டம்பட்டி, கோவை. 3) ம. பிரேமா 2/15, காமாட்சியம்மன் கோவில் வீதி, கொண்டம்பட்டி, கோவை. 4) ஈ. தேவிகா 2/16, பெருமாள் கோவில் வீதி, கொண்டம்பட்டி, கோவை. 5) வி. சரண்யா கொண்டம்பட்டி, கோவை.

### பொள்ளாச்சி வடக்கு நகரம்

அமைப்பாளர் - உமா மகேஸ்வரி 34. அம்பேத்கர் வீதி, வடுகபாளையம், பொள்ளாச்சி, கோவை - 642001.

துணை அமைப்பாளர்கள் - 1) த. நாகலட்சுமி 56. செல்வகுமாரவீதி, வடுகபாளையம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 642001. 2) ச. திவ்யபாரதி 3, செல்வகுமாரவீதி, வடுகபாளையம், பொள்ளாச்சி, கோவை - 642001. 3) வெ. சரண்யா 2, எல்.ஐ.ஜி, குடியிருப்பு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி, கோவை - 642001. 4) தாஹிராபானு 10, அழகப்பா லே-அவுட், நேதாஜி ரோடு, பொள்ளாச்சி, கோவை - 642001.

### பொள்ளாச்சி தெற்கு நகரம்

அமைப்பாளர் - நா. மரகதம் 3/2, மதுரை வீரன் கோவில் வீதி, பொள்ளாச்சி, கோவை - 642001.

துணை அமைப்பாளர்கள் - 1) மாரியம்மாள் 72, கலைவாணர் வீதி, பொள்ளாச்சி, கோவை - 642001. 2) தி. சரிதா 26/11, தன்னாசியப்பன் கோவில் வீதி, பொள்ளாச்சி, கோவை - 642001. 3) தேன்மொழி 68/29, மரப்பேட்டை வீதி, பொட்டிமேடு, பொள்ளாச்சி, கோவை - 642001. 4) மெகராபானு 191, கண்ணப்பன் நகர், மீன்கரை ரோடு, பொள்ளாச்சி, கோவை - 642001. 5) சகிலாபானு ஜோதி நகர், ஏ. காலனி, பொள்ளாச்சி, கோவை - 642001.

### குறிச்சி வடக்கு பகுதி

அமைப்பாளர் - பா. சிந்தியா 1/145, பாரதி நகர், காந்திஜி ரோடு, குறிச்சி, கோவை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) இ. நிமா டி/39. வாட்டர் டாங்க் ரோடு, மகாலிங்கபுரம், வெள்ளலூர், கோவை மாவட்டம். 2) ச. சிபானா டி/324, என்.பி. இட்டேரி ரோடு, குறிச்சி பிரிவு, கோவை மாவட்டம். 3) அ. யாஸ்மின் டி/299, என்.பி. இட்டேரி ரோடு, குறிச்சி பிரிவு, கோவை மாவட்டம். 4) ரா. கவிதா 28/எ, வெங்கடசாமி லே அவுட், குறிச்சி, சுந்தராபுரம், கோவை மாவட்டம்.

### குறிச்சி தெற்கு பகுதி

அமைப்பாளர் - ஆ. மல்லிகா 43, பாடசாலை வீதி, ஈச்சனாரி, கோவை - 641021.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. மாரியம்மாள் 45/ஏ, வ.உ.சி. காலனி, எல்.ஐ.சி. காலனி, சிட்கோ அஞ்சல், கோவை - 641021. 2) கி. லதா 1/எக்ஸ், பிள்ளையார்புரம், சிட்கோ (அ), கோவை - 641021. 3) தனலட்சுமி சி/42, குறிச்சி ஹவுசிங் யூனிட், பேஸ் -1, சிட்கோ அஞ்சல், கோவை - 641021. 4) ரம்லா ஆடிட்டர் வீதி, மேட்டூர், போத்தனூர் அஞ்சல், கோவை - 641021.

### குறிச்சி மேற்கு பகுதி

அமைப்பாளர் - எஸ். லிகோரியா 2/75, ரவுண்டு ரோடு, மாச்சம்பாளையம், சுந்திரபுரம் அஞ்சல், கோவை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. தனலட்சுமி 66/ஏ, முதலியார் வீதி, லோகநாதபுரம், கோவை மாவட்டம். 2) நா. சத்தியபாமா கோணவாய்கால் பாளையம், போத்தனூர், கோவை - 24. 3) ப. ராணி 3/13, சில்வர் ஜுபிலி வீதி, குறிச்சி, கோவை மாவட்டம். 4) வி. ஹேமலதா 4/18, ரவுண்டு ரோடு, குறிச்சி, சுந்திரபுரம் அஞ்சல், கோவை - 24. 5) சோ. குணவதி 9, பழனியப்பா கோனார் வீதி, மாச்சம்பாளையம், சுந்திரபுரம் அஞ்சல், கோவை - 24. அண்ணா அறிவாலயம்”

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்,
தி.மு.க மகளிர் தொண்டர் அணி







திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காங்கேயம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உலகப் புகழ்பெற்ற காங்கயம் காளை சிலையை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.இ.பிரகாஷ் (ஈரோடு), கே.சுப்பராயன் (திருப்பூர்), க.ஈஸ்வரசாமி (பொள்ளாச்சி), மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் பிரபாவதி பெரியசாமி, சரஸ்வதி ராஜேந்திரன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி,கடத்தூர்,மற்றும் செட்டிகரை பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி தூய்மை பணியாளர்கள்,தூய்மை காவலர்கள்,மக்கள் நல பணியாளர்கள், புதுவாழ்வு திட்ட பணியாளர்கள்,100 நாள் வேலை வாய்ப்பு பணித்தள பொறுப்பாளர்கள் உள்ளிட்ட 1,418 பேருக்கு வேட்டி,சேலையினை தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் அவைத்தலைவர் கே.மனோகரன்,ஒன்றிய செயலாளர்கள் பிரபு ராஜசேகரன்,மாது,சிவப்பிரகாசம், மற்றும் மோகன்,கௌதமன்,ரவிச்சந்திரன், சிவகுரு,உள்ளிட்ட திமுகவினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# செஞ்சியில் 5000 பேருக்கு நல உதவிகள் - செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*செஞ்சி. மார்ச். 2-*

*விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சி மத்திய ஒன்றியம் மழவந்தாங்கல், கெங்கவரம் ஆகிய ஊராட்சியில் அரிசி உள்ளிட்ட நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிநடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்குசெஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.*

*கெங்கவரம்ஊராட்சி மன்ற தலைவர்மகேஸ்வரி பொற்செழியன்,ஒன்றிய கவுன்சிலர் சத்தியா கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மழவந்தாங்கல், கெங்கவரம்ஆகிய ஊராட்சிகளில் உள்ள 5000 நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கிசிறப்புரையாற்றினார்.*

*நிகழ்ச்சியில்செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன் மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய நிர்வாகிகள்வாசு, திருநாவுக்கரசு, அய்யாதுரை, ஊராட்சி நிர்வாகிகள் மழவந்தாங்கல்திருமாவளவன் அண்ணாதுரை முருகன், காண்டிபன், செல்வம், அய்யாக்கண்ணு, சிங்காரவேல், கதிர்வேல் கெங்கவரம்முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தமிழ்ச்செல்வி தங்கதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் குமார், சக்திவேல், நிர்வாகிகள் கணேசன், சங்கர், ரமேஷ் ,சரவணன், அய்யப்பன், லட்சுமணன், டி, கணேசன், இளைஞர் அணி அன்பு தொண்டரணி மோகன் பெரியார், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

மயிலாப்பூர் - கபாலீசுவரர் திருக்கோயிலின் பயன்பாடற்ற 34 கிலோ 375 கிராம்

# பலமாற்று பொன் இனங்களை உருக்கி - சுத்தத் தங்கக் கட்டிகளாக மாற்றிடல்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஒப்படைத்தார்!

சென்னை, மார்ச் 2–

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதியரசர் துரைசாமி ராஜு அவர்கள் முன்னிலையில் 27.02.2026 அன்று சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில், பயன்பாட்டில் இல்லாத பிரித்தெடுக்கப்பட்ட 34 கிலோ 375 கிராம் எடையுள்ள பலமாற்றுப் பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை தெற்கு வட்டார துணைப் பொது மேலாளர் பிரசாத் திடம் அடையாளச் சான்றாக ஒப்படைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பக்தர்களிடமிருந்து காணிக்கையாகப் பெறப்பட்டு பயன்படுத்த இயலாத பலமாற்று பொன் இனங்களில் கல், அரக்கு, அழுக்கு நீக்கப்பட்டு, மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி, பாரத ஸ்டேட்

வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்திடும் வகையில் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள். துரைசாமி ராஜு, ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி மாலா ஆகியோரின் கண்காணிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 21 திருக்கோயில்களின் பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி கிடைக்கபெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்தத் தங்கக் கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் அந்தந்த திருக்கோயிலின் பெயரில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் ஆண்டொன்றிற்கு 17 கோடியே 76 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது. இந்த வட்டித் தொகை அந்தந்த திருக்கோயிலின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்பட்டு வருகிறது.

மேலும், காஞ்சிபுரம், காமாட்சியம்மன் திருக்கோயில், குன்றத்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவிடந்தை நித்ய கல்யாண பெருமாள் திருக்கோயில், திருமலைவையாவூர் பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில் ஆகிய 4 திருக்கோயில்களிலிருந்து கிடைக்கப்பெற்ற 53 கிலோ 386 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை உருக்கி சுத்த கட்டிகளாக மாற்றிட பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் மும்பையிலுள்ள தங்க உருக்காலைக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு முன்னிலையில் மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு காணிக்கையாக கிடைக்கப்பெற்று பயன்பாடற்ற 34 கிலோ 375 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்கள் உருக்கி சுத்தத் தங்கக் கட்டிகளாக மாற்றிட பாரத ஸ்டேட் வங்கியிடம் அடையாளச் சான்றாக ஒப்படைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் திருமதி இரா.வான்மதி, பெ.க. கவெனிதா, பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை மத்திய மண்டல மேலாளர் இன்பரசு, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி விமலா கிருஷ்ணமூர்த்தி, திருக்கோயில் அறங்காவலர்கள் ப.திருநாவுக்கரசு, எம்.பி.மருதமுத்து, சி.டி.ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆயத்தமாகும். அன்னைத்தமிழகம்!

**உ**லகின் அசைக்க முடியாத
வல்லரசாகத் திகழும் அமெரிக்கா
தான்

உலகில் அதிகமாக கடன் வாங்கி
யுள்ள முதல் நாடாக இருக்கிறது.

ஆம் ...

ஒரு நாடு
அனைத்துத் துறைகளிலும்
தன்னை
முன்னணியில் நிறுத்திட பெறப்படும்
மூலதனச் செலவுகளுக்கான
கடன் என்பது
அந்த நாட்டுக்கான வளர்ச்சிக்கு
உதவுவதோடு
அது மறைமுகச் சொத்தாக
உருவெடுக்கும் என்பதாகும்..

உதாரணமாக

ஒரு குடும்பம்
அதன்
வளர்ச்சிக்காக
அக் குடும்பத்துப் பிள்ளைகளின்
கல்விக்காக
அல்லது தொழில் முதலீட்டுக்காகப்
பயன்படுத்துகிற கடன்
அக்குடும்பத்தின் வளர்ச்சிக்கு
அடிப்படையாகி
அதுவே
ஆஸ்திகளை விசாலமாக்கும்
முதலீட்டுச்
சொத்தாக மாறுகிறது..

இது


மாதம்
இருபதாயிரம் சம்பாதிக்கும்
ஒரு தொழில் முனைவோன்
இரண்டு லட்சம்
கடன் பெற்று
தன் தொழிலை மேம்படுத்தி
லாபத்தைக் கூடுதலாக்கி வளர்ச்
சியை விசாலப்
படுத்துவது போன்றதாகும்..

அது போலத்தான்

மத்திய ரிசர்வ் வங்கியின்
கட்டுப்பாட்டு
அளவுக்குள்
தன் கடன் அளவை நிர்வகித்து
வரும் தமிழ்நாடு
கல்வி, சுகாதாரம்,
தொழில் வளர்ச்சி, உட்கட்டமைப்பு
என அனைத்துத் துறைகளிலும்
நாட்டிலேயே
முதல் மற்றும் இரண்டாம்
இடங்களைப் பிடித்து

நாட்டின் ஒட்டுமொத்தப்
பொருளாதார வளர்ச்சியில்
11.19 சதவீதம் என்னும் இமாலயச்
சாதனையை நிகழ்த்தி

தேசத்தின்
வளர்ச்சி
அளவை விட
இரட்டிப்பு வளர்ச்சி என்னும்
பெருமையைப் பெற்றுள்ளது..



மேலும்

ஜி.எஸ்.டி. வருமானவரி
ஆகியவற்றில்
தனது கூடுதல் பங்களிப்பால்
நாட்டுக்கும் பெரும்
பங்காற்றுவதோடு
இந்தியாவுக்கே
முதுகெலும்பாகவும்
மூளையாகவும் தமிழ்நாடு
திகழ்கிறது

அதுவும்
மத்தியில ஆளும் ஒன்றிய பா.ஜ.க.
அரசின் ஒத்துழையாமையோடு
என்பது குறிப்பிடத்தக்கதாகும்..

இந்தப் பெருமிதத் தோரணங்க
ளுக்கும் பெருமைகளின்
அணிவகுப்புக்கும்
காரணமாகத் திகழும்
திராவிட மாடல் நாயகர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
அவர்களுக்கு
நன்றி செலுத்த தமிழகம் தயாரா
கிக் கொண்டிருக்கிறது..

முறையாகத் திட்டமிட்டு
முன்னேற்றம்
என்பதையே
முதல் இலக்காகக் கொண்டு
அதற்காக முழுமூச்சாக
முக்காலமும் உழைத்து

முட்டுக்கட்டைகளை வெற்றிக்
கோப்பைகளாக மாற்றும்
வித்தை அறிந்த வெற்றியாளராக

மக்களை
முறை செய்து காக்கும்
மன்னவராக

உலகம் விழித்துப் பார்க்கும்
ஒப்பில்லா
முதல்வராகத்
திகழும்

அந்த

‘முத்துவேல்
கருணாநிதி ஸ்டாலின்’ எனும்

மக்கள்
தலைவருக்கு
மாசற்ற
முதல்வருக்கு

ஒட்டுமொத்தத்
தமிழக மக்களும்
தங்களின்
ஒருவிரல்
புரட்சியால்
நன்றி கூறும்

அந்த
மகோன்னத
நாளுக்கு
மக்கள் திருவிழாவிற்கு

அன்னைத் தமிழ்நாடே
ஆயத்தம்..

ஆம்..

'மீண்டும்
ஸ்டாலின்

வேண்டும்
ஸ்டாலின்'

என்னும்
மந்திர மொழியை

உரக்கச்
சொல்லக் காத்திருக்கும்
எந்திரங்களோடு..

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*